## “சுபீட்சத்தின் நோக்கு”

## சமுர்த்தி மாதிரி வீட்டுத்தோட்ட வேலைத்திட்டம் - 2020

சுபீட்சத்தின் நோக்கு மனைப் பொருளாதார போசனையினை மேம்படுத்தி குடும்ப அலகினை வலுவூட்டும் தேசிய வீட்டுத்தோட்ட பயிர் செய்கைத் திட்டத்திற்கமைய சமுர்த்தி மாதிரி வீட்டுத்தோட்ட வேலைத்திட்டம் அரசாங்கத்தினால் நெறிப்படுத்துகின்ற தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் 10 வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு வதைப்பைகக்கற்றுக்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மனைப் பொருளாதார போசணையிணை மேம்படுத்தி குடும்ப அலகினை வலுவூட்டும் தேசிய வீட்டுத்தோட்ட பயிர்சசெய்கைத் திட்டத்திற்கமைய கிராம மட்ட உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு தலா 12 நாற்றுக்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. கத்தரி, தக்காளி, மிளகாய், கறிமிளகாய் என நான்கு வகையிலும் 308,437 நாற்றுக்கள் 48044 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிகளிற்கு முதற் கட்டமாக விதைப் பைக்கற்றுக்கள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் 100 பயனாளிகள் வீதம் மொத்தமாக 43,500 பயனாளிகளிற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலதிகமாக 9837 பயனாளிகளிற்கு விதைப் பைக்கற்றுக்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சௌபாக்கியா வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டு தென்னங்கன்றுகள் வழங்கல்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சௌபாக்கியா வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2948 தென்னங்கன்றுகள் 15 பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### விசேட வீட்டுத்திட்டம்

விசேட வீட்டுத்திட்டத்திற்கமைய சமுர்த்தி நலனுதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 104 பயனாளிகளிற்கு தலா 2 இலட்சம் வீதம் 20.8 மில்லியன் ரூபா வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

### மலசலகூடம் அமைத்தல்

சமுர்த்தி நலனுதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 370 பயனாளிகளிற்கு தலா 30,000.00 வீதம் 11.1 மில்லியன் ரூபா செலவில் மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

### சௌபாக்கியா வீட்டுத்திட்டம்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிற்கும் தலா ஒரு வீடு என்ற வகையில் 6 இலட்சம் ரூபா செலவில் வீடு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் முதற் கட்டமாக ரூபா 2 இலட்சம் வீதம் 3 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**மனைப் பொருளாதார அலகினை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்**

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களில் ஒன்றான சமுர்த்தி நலனுதவி பெறும் குடும்பங்களை வலுப்படுத்துவதற்கான முன்னோடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து ஒரு கிராம அலுவலர் பிரிவினைத் தெரிவு செய்து மொத்தமாக 2755 பயனாளிகளுக்கு 295300.00 செலவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மலசலகூட வேலைத்திட்டம்

**பிரதேச செயலகம் பருத்தித்துறை**

.



**பிரதேச செயலகம் சாவகச்சேரி**



## நாற்றுக்கள் வழங்கல்

**பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்**



**பிரதேச செயலகம் கரவெட்டி**



## விதைப் பக்கற்றுகள் வழங்கல்





## விசேட வீட்டுத்திட்டம்

**பிரதேச செயலகம், வேலணை**

**வீடுதிருத்தத்திற்கு முன்**



**வீடுதிருத்தத்திற்கு பின்**



## வலுவூட்டுதல் வேலைத்திட்டம்

**பிரதேச செயலகம் சங்கானை**

